எண்.8282/இசநி/கோ.1/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம் (3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---------

புதுச்சேரி நாள்: 20.03.2020.

# சுற்றறிக்கை

பொருள்: இசநி – கொரோனோ வைரஸ் தொற்று – பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் - அறிவுறுத்தல் - சம்மந்தமாக.

பார்வை:
1. 17.03.2020 ஆம் தேதியிட்ட இத்துறையின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கை.
2. மாவட்ட ஆட்சியர் புதுச்சேரி அவர்களின் 19.03.2020 ஆம் தேதியிட்ட ஆணை எண்:4/DROM/RO/D2/2020.

****

மேலே பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்கண்ட சுற்றறிக்கையின் வாயிலாக திருக்கோயில்களை பொறுத்தவரை கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க ஒரு சில வழிமுறைகளை கையாளும் படி திருக்கோயில் நிர்வாகத்தினரிடம் அறிவுறுத்தப்பட்டு இருந்தது. மேலும் மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி அவர்கள் 19.03.2020 அன்று கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் சம்மந்தமாக ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி மேலே பார்வை 2-ல் கண்டுள்ள ஆணையை பிறப்பித்துள்ளார்.

3. எனவே மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கு இணங்கவும் மேலும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கவும் திருக்கோயில் நிர்வாகத்தினர் கீழ் கண்ட விதிமுறைகளை உடனடியாக தவறாமல் கடைபிடிக்குமாறு பணிக்கப்படுகிறது.

i. ஆலய வளாகத்தில் கண்டிப்பாக கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும்.

ii. ஆலய வளாகத்தில் கூட்டம் கூடுவதை தவிர்க்க பொது தரிசனம் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் 31.03.2020 வரை ரத்து செய்யப்பட வேண்டும்.

iii. ஆனால் அன்றாட நைவேத்தியம் உள்ளிட்ட தினசரி பூஜைகள் பொது மக்கள் தரிசனம் இன்றி நடத்தப்பட வேண்டும். பிரசாத விநியோகம் தவிர்க்கப்பட வேண்டும்.

iv. ஒவ்வொரு நுழைவு வாயிலிலும் கை கழுவும் திரவியம் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் கொரோனா வைரஸ் தொற்று பற்றிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் / பதாகைகள் வைக்கப்படுதல் வேண்டும்.

-2/-

Scanned with CamScanner

4. இதனை மிக மிக அவசரம் என கருதவும். மேற்கல செயல்முறைகளை நடைமுறை படுத்தியதற்கான ஒரு அறிக்கையை (Compliance Report) இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

/ஆணைப்படி /

(ஞா. சச்சிதானந்தம்)
ஆணையர்
இந்து சமய நிறுவனங்கள்

பெறுநர்:

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து திருக்கோயில் நிர்வாகத்தினர்.

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி/காரைக்கால்.
2. இயக்குநர் சுகாதாரத்துறை, புதுச்சேரி.
3. துணை மாவட்ட ஆட்சியர்(வருவாய்) (தெற்கு/வடக்கு) புதுச்சேரி/கவில்லியனூர். காரைக்கால்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர்,
சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.

Scanned with CamScanner